**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.135 / 2024**

**Dated:02.06.2026**

Name : கீதா (PW2)

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் பி.இ. படித்துள்ளேன். நான் மதுரை காளவாசல் பாண்டியன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பெல் குரூப் ஆப் ஹோட்டலில் பிசினஸ் அனலிஸாக பணிபுரிந்து வருகிறேன். பிரதிவாதியின் தந்தை பூவேந்திரன் எனக்கு தூரத்து உறவினர் என்ற முறையில் பழக்கம். பிரதிவாதியின் தந்தையும், நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவோம். மேற்படி பாண்டியன் நகரில் நான் 2ம் வகுப்பு படிக்கும் போதிலிருந்து 34 ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தையின் சொந்த ஊர் வி.பெருமாள்பட்டி என்றால் சரிதான். வாதி தூத்துக்குடியை சேர்ந்தவர். வாதி மேற்படி ஹோட்டலில் என்னுடன் மேலாளராக பணிபுரிந்து வருகிறார். வாதி மதுரையில் குடியிருக்கவில்லை. வாதி மதுரை தமிழ் சங்கம் ரோட்டில் தனியாக அலுவலகம் வைத்து நடத்தி வருவதாக தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். அதை நான் தான் பார்த்து வருகிறேன். நான் வழக்கிற்காக வாதி மேற்படி ஹோட்டலில் மேலாளராக இருக்கிறார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் தான் வழக்கறிஞருக்கு தெரிவித்தேன். பூவேந்திரன் தாவா சொத்து பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். 11.12.2020ம் தேதி நான் பாகப்பிரிவினை பத்திரத்தை பார்த்த அதே தேதியில் கடன் கேட்டு பூவேந்திரன் வந்தார் என்றால் அந்த தேதியில் தான் கடன் கொடுக்கப்பட்டது. 11.12.2020ல் உசிலம்பட்டி, சார்பதிவாளர் அலுவலகத்தில் கடன் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மதுரையில் எனது அலுவலகத்தில் பணம் கொடுத்துவிட்டு, அதே தேதியில் உசிலம்பட்டியில் கடன் பத்திரத்தை பதிவு செய்தோம் என்றால் சரிதான். பூவேந்திரன் கொடுத்த பாகப்பிரிவினை பத்திரத்தில் சொத்து பூர்வீகமாக பாத்தியப்பட்டது என உள்ளது என்றால் தனியாக பதிவு செய்யப்பட்டது என தான் என்னிடம் கூறினார். பூர்வீக சொத்து என்றால் பூவேந்திரன் மகன் மற்றும் மகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் பூவேந்திரன்

சொத்து தனது பெயரில் இருப்பதால் அவர் பதிவு செய்து கொடுத்தாக கூறினார். கடன் அடமான பத்திரத்தில் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் பூவேந்திரன் தன்னுடைய சொத்து என்பதால் தனது பிள்ளைகள் கையெழுத்து செய்ய தேவையில்லை என கூறிவிட்டார். வாதி வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறார். பூவேந்திரனுக்கு கொடுத்த ரூ.5 லட்சத்தை வருமான வரி கணக்கில் வாதி காட்டியுள்ளார். அந்த வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. வாதி மதுரை தமிழ்சங்கம் ரோட்டில் பைனான்ஸ் நடத்தி அதிக வட்டிக்கு பணம் வசூல் செய்து தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் கூறியதால் தான் பணம் கொடுத்தார். வாதி வட்டி தொழில் செய்து வருவதால் தான் பிரதிவாதியின் தந்தை பூவேந்திரன் கேட்ட அதே தேதியில் வாதியால் பணம் கொடுக்க முடிந்தது என்றால் பூவேந்திரன் 10, 15 நாட்களுக்கு முன்பே வாய்மொழியாக கடன் கேட்டிருந்தார். பிரதிவாதியின் தந்தை பூவேந்திரன் 10, 15 நாட்களுக்கு முன்பே கடன் கேட்ட விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். குறைந்த தொகைக்கு பணம் கொடுத்துவிட்டு, அதிக மதிப்புள்ள சொத்தை எழுதி வாங்குவது வழக்கமாக கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. அவர் பணத்தை திரும்ப கொடுத்திருந்தால் கடன் பத்திரத்தை ரத்து செய்திருப்போம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கணவர் முதல் சாட்சியாகவும், இரண்டாவது சாட்சியாக நானும் கையெழுத்து செய்துள்ளோம் என்றால் சரிதான். சாட்சி கையெழுத்து போட்டபின்பு என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதியுடன் சேர்ந்து பைனான்ஸ் தொழில் செய்கிறேன் என்றால் வாதி எனக்கு நண்பர் என்ற முறையில் கடன் வாங்கி கொடுத்ததால் எனக்கு விவரம் தெரியும். பூவேந்திரன் கொரோணா காலகட்டத்தில் இறந்தார். பூவேந்திரன் இறந்த பிறகு பூவேந்திரன் மனைவி ஈஸ்வரி வாதியின் மீது மதுரை, மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி விசாரணைக்கு நானும், வாதியும் வரவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விசாரணையில் நாங்கள் ரூ.5 வட்டிக்கு கொடுத்துள்ளோம் என்றும், ரூ.1 வட்டி போதாது என பணம் கேட்டோம் என்றால் அவர்கள் பணம் கொடுக்கவேயில்லை. போலீசார் விசாரணையின் போது பிரதிவாதிகள் பணம் கொடுக்க தயாராக இருந்தார்கள் என்றாலும், நாங்கள் ரூ.5 வட்டி கேட்டு வாங்க மறுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. பிரதவாதிகளின் தந்தை பூவேந்திரனுக்கு

வா.சா.ஆ.1 அடமான பத்திரம் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. பூவேந்திரனை மோசடி செய்து நானும், வாதியும் அடமான பத்திரம் எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகளிடமிருந்து எந்த தொகையையும் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நான் பூவேந்திரனின் தூரத்து உறவினர் இல்லையென்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI Digitally signed by L MAHESWARI Date: 2026.06.02 22:26:01 +0530

Sub Judge
Usilampatti